வடக்கு மா.பொ.சே.ஆ. குழு சுற்றறிக்கை இல : **16/2014**

எனது இல: NP/07/10/04/31
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம், யாழ்ப்பாணம்
*24.09.2014*

**பிரதம செயலாளர்,**
அமைச்சின் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
**வடக்கு மாகாணம்.**

**வடக்கு மாகாண அரசாங்க சேவையிலுள்ள கனிஷ்ட ஊழியர்களை மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2013(2014)**

வடக்கு மாகாண அரச சேவையிலுள்ள கனஷ்ட ஊழியர்களை மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்ாகான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்யையானது மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களால் இவ்வாண்டின் டிசம்பர் மாதம் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. (*1878* ஆம் இலக்க *2014.08.29* ஆம் திகதிய வர்மானப் பத்திரிகையின் பிரிவு (IIஅ) வையும் அதன் மீது மேற்கொள்ளப்படவுள்ள ஏதேனும் திருத்தங்களையும் தழுவியதாக வடக்கு மாகாணத்தில் கடமையாற்றிக்கொண்டிருக்கும் கனிஷ்ட ஊழியர்களுக்காக இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது)

*2.* மாகாண அரச சேவையைச் சோர்ந்த கனிஷ்ட ஊழியர்களுக்காக இப்பரீட்சை கீழ்குறிப்பிடப்படும் நகரங்களில் நடாத்தப்படும். அந்நகரங்களும் நகர இலக்கங்களும் குறிப்பிடப்படுள்ளன. போதியளவு பரீட்சார்த்திகள் தோற்றாதவிடத்து அல்லது ஏனைய காரணங்களின் பேரில் ஏதேனும் பரீட்சை நிலையமொன்றை இரத்துச்செய்யுமிடத்து பரீட்சார்த்திகளின் இரண்டாவது விருப்பப்படி பரீட்சை நிலையத்தைத் தீர்மானிக்கும் தற்றுணிபு பரீட்சை ஆணையாளர் நாயகத்தைச் சார்திருக்கும்:

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| முல்லைத்தீவு | 12 |
| வவுனியா | 13 |
| கிளிநொச்சி | 25 |

*3.* (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் சட்டங்களுக்கு அமைவாக பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அவரின் தீர்மானமே இறுதியானது.

(ii) பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும் *1878* ஆம் இலக்க *2014.08.29* ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் தனியாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகம் அவரக்களால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாவதற்கு நேரிடும்.

*4.* ***பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்கு தோற்ற வேண்டிய மொழி மூலம்:*** இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தமது விருப்பப்படி இதில் ஏதேனும் ஒரு மொழியில் மட்டும் இப்பரீட்சைக்கு தோற்ற வேண்டுமென்பதுடன் விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

*5.* ***சம்பள அளவுத்திட்டம்.-*** 2007.08.24 ஆந் திகதிய 06/ 2006 (IV) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின்படி மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III, II மற்றும் I ஆகிய தரங்களுக்கு ஏற்புடையதான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 13,990 - 10 x145 - 11 x170 - 6 x 240 – 14x 320 – 23,230 ரூபா ஆகும். ரூபா *15,440* ஐக் கடந்து செல்வதற்காக தரம் II இற்கான தரமுயர்வும் ரூ. 17,310 ஐக் கடந்து செல்வதற்காக வகுப்பு I இற்கான தரமுயர்வும் பெறுதல் வேண்டும்.

***குறிப்பு.-*** நியமனம் பெறுகின்ற சந்தர்ப்பத்தில் நடைமுறைப்படுத்தப்படும் சம்பள அதிகரிப்பு தொடர்பான சுற்றறிக்கைகளுக்கு அமைய, அவர்களுக்கு சம்பள ஏற்ற அனுகூலங்களும் வழங்கப்படும்.

*6.* **சேவை நிபந்தனைகள் :**

(i) நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். சில வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான உரிமையினை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

